உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

அறுபத்துமூன்று நாயன்மார்களுள்

# திருநாளைப்போவார் நாயனார், திருக்குறிப்புத்தொண்ட நாயனார்

திவ்வியசரித்திரங்கள்.



இவை

இந்துமதாபிமானிகளின் வேண்டுகோளிற் கிணங்கச்

சுருக்கமாகத்தொகுக்கப்பட்டு,

சை. ந. நமசிவாயசெட்டியார் அவர்களால்

மதராஸ் ரிப்பன் அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டன.

1889.

இதன் விலை பை மூன்று.] [தபாற்கூலி 10 - க்குப் பை. 6.

சிவமயம்.

# ஸ்ரீமந் மாணிக்கவாசகசுவாமிகள்

தில்லையிலருளிச்செய்த,

# திருச்சாழல்.

திருச்சிற்றம்பலம்.

பூசுவதும் வெண்ணீறு பூண்பதுவும் பொங்கரவம்
பேசுவதுந் திருவாயான் மறைபோலுங் காணேடீ
பூசுவதும் பேசுவதும் பூண்பதுவுங் கொண்டென்னை
யீசனவ னெவ்வுயிர்க்கு மியல்பானான் சாழலோ. (௧)

என்ன ...னம்பிரா னெல்லார்க்குந் தானீசன்
றுன்ன... ய் கோவணமாக் கொள்ளுமது வென்னேடீ
மன்னுக... ன்னுபொருண் மறைநான்கே வானசரடாத்
தன்னையே கோவணமாச் சாத்தினன்காண் சாழலோ. (௨)

கோயில் சுடுகாடு கொல்புலித்தோ னல்லாடை
தாயுமிலி தந்தையிலி தான்றனியன் காணேடீ
தாயுமிலி தந்தையிலி தான்றனிய னாயிடினுங்
காயி லுலகனைத்துங் கற்பொடிகாண் சாழலோ. (௩)

அயனை யனங்கனை யந்தகனைச் சந்திரனை
வயனங்கண் மாயா வடுச்செய்தான் காணேடீ
நயனங்கண் மூன்றுடைய நாயகனே தண்டித்தாற்
சயமன்றோ வானவர்க்குத் தாழ்குழலாய் சாழலோ. (௪)


தக்கனையு மெச்சனையுந் தலையறுத்துத் தேவர்கணந்
தொக்கனவந் தவர்தம்மைத் தொலைத்ததுதா னென்னேடீ
தொக்கனவந் தவர்தம்மைத் தொலைத்தருளி யருள்கொடுத்தங்
கெச்சனுக்கு மிகைத்தலைமற் றருளினன்காண் சாழலோ. (௫)

அலரவனு மாலவனு மறியாமே யழலுருவாய்
நிலமுதற்கீ ழண்டமுற நின்றதுதா னென்னேடீ
நிலமுதற்கீ ழண்டமுற நின்றிலனே லிருவருந்தஞ்
சலமுகத்தா லாங்காரந் தவிரார்காண் சாழலோ. (௬)


மலைமகளை யொருபாகம் வைத்தலுமே மற்றொருத்தி
சலமுகத்தா லவன்சடையிற் பாயுமது வென்னேடீ
சலமுகத்தா லவன்சடையிற் பாய்ந்திலளேற் றரணியெல்லாம்
பிலமுகத்தே புகப்பாய்ந்து பெருங்கேடாஞ் சாழலோ. (௭)

கோலால மாகிக் குரைகடல்வா யன்றெழுந்த
வாலால முண்டா னவன்சதுர்தா னென்னேடீ
யாலால முண்டிலனே லன்றயன்மா லுள்ளிட்ட
மேலாய தேவரெல்லாம் வீடுவர்காண் சாழலோ. (௮)

தென்பா லுகந்தாடுந் தில்லைச்சிற் றம்பலவன்
பெண்பா லுகந்தான் பெரும்பித்தன் காணேடீ
பெண்பா லுகந்திலனேற் பேதா யிருநிலத்தோர்
பா லியோகெய்தி வீடுவர்காண் சாழலோ. (௯)



திருவாலங்காட்டு இரத்தினசபாபதிசுவாமிகள் திருநடன ஊர்த்தவதாண்டவ ஐதிகம்.



திருநாளைப்போவார் நாயனார்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

அறுபத்துமூன்று நாயன்மார்களுள் ஒருவராகிய

நந்தனாரென்னும்

# திருநாளைப்போவார்

## நாயனார்

## திவ்வியசரித்திரம்.

சந்தானாசாரியராகிய

உமாபதிசிவாசாரியார்

திருவாய்மலர்ந்தருளிய

### புராணசாரம்.

நன்மைதிகழ்மேற்காநாட்டாதனூர்வாழ்நந்தனார்
புறத்தொண்டர்நாளைப்போக
பொன்மலிதென்புலியூர்க்கென்றுரைப்பார்புன்கூர்ப்
பொய்கையமைந்தடலேறுபிரியநோக்கி
வன்மதில்சூழ்தில்லையிறையருளால்வாய்ந்த
வண்டழலினிடைமூழ்கிமறையோர்போற்ற
மின்மலிசெஞ்சடைமுனியாயெழுந்துநாதன்
விளங்குநடந்தொழமன்றுண்மேவினாரே.

### திவ்வியசரித்திரம்.

சோழமண்டலத்திலே மேற்காநாட்டிலே ஆதனூரிலே புலையர்குலத்திலே, நந்தனென்பவர் ஒருவர் இருந்தார். அவர் பரமசிவனுடைய திருவடிகளையேயன்றி மற்றொன்றையும் மறந்தும் நினையாதவர். அவ்வூரிலே தமக்கு வெட்டிமைக்காக விடப்பட்டிருக்கின்ற மானியமாகிய நிலத்தின்விளைவினாலே சீவனஞ்செய்துகொண்டு, தாம் செய்யவேண்டும் தொழிலை நடத்துகின்றவர். சிவாலயங்கள்தோறும் பேரிகைமுதலாகிய ஒருமுகக்கருவிகளுக்கும் மத்

தளமுதலாகிய இருமுகக்கருவிகளுக்கும் தோலும் வாரும், வீணைக்
கும் யாழுக்கும் நரம்பும், அருச்சனைக்குக் கோரோசனையும் கொ
டுக்கின்றவர். ஆலயங்களின் திருவாயிற்புறத்தில் நின்றுகொண்டு,
அன்பின்மேலீட்டினால் கூத்தாடிப்பாடுகின்றவர். அவர் ஒருநாள்,
திருப்புன்கூரிலேபோய்ச் சுவாமிதரிசனம்பண்ணித் திருப்பணிசெ
ய்தற்குவிரும்பி, அங்கேசென்று கோயில்வாயிலிலேநின்றுகொண்டு
சுவாமியை நேரேதரிசித்துக் கும்பிடவேண்டும் என்றுநினைத்தார்.
சுவாமி அவருடைய விருப்பத்தின்படியே தமக்கு முன்னிருக்கி
ன்ற இடபதேவரை விலகும்படிசெய்து, அவருக்குக் காட்சிகொ
டுத்தருளினார். நந்தனார் அந்தஸ்தலத்திலே ஒருபள்ளத்தைக்க
ண்டு, பெரியகுளமாகவெட்டித் தம்முடைய ஊருக்குத்திரும்பி
னார். அவர், இபபடியே பலஸ்தலங்களுக்கும்போய்வணங்கித் திரு
ப்பணிசெய்துவந்தார். ஒருநாள், சிதம்பரஸ்தலத்திற்குப் போகவே
ண்டும் என்று ஆசைகொண்டு, அவ்வாசைமிகுதியினாலே அன்றிர
வுமுழுதும் நித்திரைசெய்யாதவராகி விடிந்தபின் நான் சிதம்பரஸ்
தலத்திற்குப்போனால் கோயிலினுள்ளே பிரவேசிக்கும் யோக்கிய
தை என்சாதிக்கு இல்லையே என்று துக்கித்து, இதுவும் சுவாமியி
னுடைய அருள்தான் என்றுசொல்லிப் போகாதொழிந்தார். பின்
னும் ஆசை அதிகரித்தலால், நாளைக்குப்போவேன் என்றார். இப்ப
டியே நாளைக்குப்போவேன் நாளைக்குப்போவேன் என்று அநேக
நாட்கள்கழித்தார். அதனால் அவருக்குத் **திருநாளைப்போவார்** என்
னும் திவ்வியதிருநாமம் உண்டாயிற்று.

ஒருநாள் அவர் சிதம்பரதரிசனம் பண்ணவேண்டும் என்னும்
ஆசைபிடித்துந்துதலால், தம்முடைய ஊரினின்றும் புறப்பட்டு,
சிதம்பரத்தின் எல்லையை அடைந்து, அவ்வூரைச்சுற்றிய மதில்வா
யிலிலேபுகுந்து, அங்குள்ள பிராமணர்களுடைய வீடுகளிலே ஓம
ஞ்செய்யப்படுதலைக்கண்டு, உள்ளேபோதற்கு அஞ்சி, அங்கே நமஸ்
கரித்து அவ்வெல்லையை வலஞ்செய்துகொண்டு போவார். இப்படி
இராப்பகல் வலஞ்செய்து, உள்ளேபோகக்கூடாமையை நினைந்து
வருந்துகின்ற திருநாளைபபோவார், சபாநாயகரை எப்படித் தரிசிக்
கலாம்; இந்த இழிந்தபிறப்பு இதற்குத்தடைசெய்கின்றதே என்று
துக்கத்தோடும் நித்திரைசெய்தார். சபாநாதர் அவருடைய வருத்
தத்தைநீக்கி அவருக்கு அருள்செய்யத் திருவுளங்கொண்டு, அவ
ருக்குச் சொப்பனத்திலேதோன்றி, நீ இந்தப்பிறப்பு நீங்கும்படி
நெருப்பிலேமூழ்கி எழுந்து பிராமணர்களோடும் நம்முடைய சந்நி
தானத்தில் வருவாய் என்று அருளிச்செய்து, தில்லைவாழந்தணர்க்
கும் சொப்பனத்திலேதோன்றி, அந்தத்திருநாளைப்போவார் பொ
ருட்டு நெருப்பைவளர்க்கும்படி ஆஞ்ஞாபித்து, மறைந்தருளினார்.

தில்லைவாழந்தணர்கள் எல்லாரும் விழித்தெழுந்து, கோயில் வாயிலிலேவந்துகூடி சபாநாயகர் ஆஞ்ஞாபித்தபடி செய்வோம் என்றுசொல்லி திருநாளைப்போவாரிடத்திலே சென்று, ஐயரே! சபாநாயகருடைய ஆஞ்ஞையினாலே இப்பொழுது உமபொருட்டு நெருப்புவளர்க்கும்படி வந்தோம் என்றார்கள். அதைக்கேட்ட திருநாளைபபோவார், அடியேன் உய்ந்தேன் உய்ந்தேன் என்றுசொலலி வணங்கினார். பிராமணர்கள் தென்மதிற்புறத்திலே கோபுரவாயிலுக்குமுன்னே ஒருகுழியிலே நெருப்புவளர்த்து அதைத் திருநாளைப போவாருக்குபபோய்த் தெரிவித்தார்கள். திருநாளைப்போவார் அந் நெருப்புக்குழியை அடைந்து சபாநாயகருடைய திருவடிகளைமன திலேதியானம்பண்ணி, அதனை வலஞ்செய்து கும்பிட்டுக்கொண்டு, அதிலுள்ளேபுகுந்தார். புகுந்தநாயனா அந்தத்தேகத்தை ஒழித்து புண்ணியமயமாகிய பிராமணமுனி வடிவங்கொணடு உபவீதத் தோடும சடைமுடியோடும் எழுந்தார். அதுகணடு தில்லை வாழந்தணர்களும் மற்றைச் சிவபக்தர்களும் அஞ்சலிசெய்து களிப்படைந் தார்கள். திருநாளைப்போவார் அவர்கள் உடன்செலலச்சென்று கோபுரத்தை அணுகி, அதனை நமஸ்கரித்து எழுந்து, உள்ளேபோய்க் கனகசபையை அடைந்தார். பின் அவரை அங்கு நின்ற பிராமணர் முதலியோர் யாவரும் காணாமையால் ஆச்சரியங்கொண்டு ஸ்தோத்திரஞ்செய்தார்கள். சபாநாயகர் திருநாளைப்போவாருக்குத் தம்முடைய ஸ்ரீ பாதங்களைக் கொடுத்தருளினார். சுபம! சுபம!!.


திருநாளைப்போவார்நாயனார் முத்தியடைந்தநாள்:—

புரட்டாசிமீ உரோகிணிநக்ஷத்திரம்.

திருநாளைப்போவார்நாயனார்

திவ்வியசரித்திரம்

முற்றிற்று.



ஸைவபக்தர்வேடங்கொண்ட பரமேஸ்வரர்.

திருக்குறிப்புத்தொண்டர் கற்பாறையில் தலைஉடைத்துக்கொள்ள முயன்ற ஐதீகம்.



பார்வதிசமேதர்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

அறுபத்துமூன்று நாயன்மார்களுள் ஒருவராகிய

# திருக்குறிப்புத்தொண்ட

## நாயனார்

## திவ்வியசரித்திரம்

சந்தனாசாரியராகிய

உமாபதிசிவாசாரியார்

திருவாய்மலர்ந்தருளிய

## புராணசாரம்.

கொந்தலர்பூம்பொழிற் கச்சிநகரேகாலிக்குலத்தலைவர்
தவர்குறிப்புக்குறித்துளார்பால்
வந்திறைவர் நமக்கின்று தாரீராகின்
வருந்துமுடலெனவாங்கிமாசுநீத்த
கந்தைபுல ராதொழிய மழையுமாலைக்
கடும்பொழுதும்வரக்கண்டுகலங்கிக்கன்மேற்
சிந்தமுடிபுடைப்பளவிற்றிருவேகம்பர்
திருக்கைகொடுபிடித்துயர்வான்சேர்த்திடுனரே.

## திவ்விய சரித்திரம்.

தொண்டைமண்டலத்திலே காஞ்சிபுரத்திலே ஏகாலியர் குலத்திலே சிவனடியார்களுடைய திருக்குறிப்பையறிந்து அவர்களுக்குத் தொண்டு செய்கின்றமையால் திருக்குறிப்புத்தொண்டர் எனப பெயர்பெற்ற ஒருபெரியவர் இருந்தார். அவர் மிகுந்த விருப்பத்தோடு சிவபக்தர்களுக்கு வஸ்திரம ஒலித்துக்கொடுத்து வருங் காலத்திலே ஏகாம்பரநாதர் இவரது அன்பின் பெருமையைப் பலருக்கும் தெரிவிப்பான்வேண்டி குளிர்காலத்திலே ஒரு சிவ பத்தர்வேடங்கொணடு, மெலிந்த சரீரத்தையுடைய ஒருவறிய வர்போலாகி, அழுக்கடைந்த கந்தையுடன் அவரிடத்திற்சென்றார். திருக்குறிப்புத்தொண்டர் அவரைக்கண்டு எதிர்கொண்டுவணங்கி பல உபசாரவார்த்தைகளைச்சொல்லி, அவருடைய குறிப்பையறிந்து, உமது கந்தையைத்தந்தருளும் ஒலித்துத் தருகின்றேன் என்றார். சிவபக்தர் வேடங்கொண்ட கடவுள் இந்தக்கந்தை அழுக்கு

அதிகமாக ஏறப்பெற்றுத் தரிக்கப்படுதற்குத் தகுதியில்லாததா யி
ருந்தாலும் குளிர் மிகுதியினுல் வருத்தமுறுகின்றபடியால் கைவி
டுதல்கூடாது. அஸ்தமயனத்திற்குமுன் தருவீராயின் கொண்டு
போய்ச் சீக்கிரமாக ஒலித்துக்கொண்டுவாரும் என்றார். திருக்குறி
ப்புத் தொண்டர் அடியேன் தாழாமல் ஒலித்து அஸ்தமயனத்து
க்குமுன் கொண்டுவந்து தருகின்றேன்; தந்தருளும் என்று சொ
ல்ல, சுவாமி விரைவிலேஒலித்து உலர்த்தித்தராதொழிவீராயில்
இந்தத் தேகத்துக்குத் துன்பஞ்செய்தீர் என்றுசொல்லி அக்கந்தை
யை அவர்கையிற்கொடுத்தார். திருக்குறிப்புத்தொண்டர் அதை
வாங்கிக்கொண்டு ஒரு குளத்திற்சென்று முன்சிறிதழுக்குப்போ
க்கி வெள்ளாவியிலவைத்துப்பின் ஒலிக்கப்புகுந்தார். அப்பொழுது
பரமசிவனுடைய திருவருளினுலே நண்பகலொழிந்து பின்பகல்
போலத்தோன்றும்படி மேகங்கள் இரண்டும்ஆகாயவெளி எல்லாம்
மறைத்து மழைபெய்தன. அதுகண்டு திருக்குறிப்புத்தொண்டர்
சிவபத்தருக்குத் தாம் வாக்குச்செய்ததை நினைந்து இனி நான் யா
துசெய்வேன் என்று கவலையுற்று விரைவிலே மழை விடவுங்கூடு
மென்று அங்கேதானேநின்றார். அதுவிடவில்லை; பின் இராக்காலம்
வர, திருக்குறிப்புத்தொண்டர் குளிரினுலே திருமேனி நடுங்குகி
ன்ற சிவபத்தருக்கு நான்செய்யவிரும்பிய பணிவிடைஐயையோ!
தவறிப்போயிற்றே என்று கீழேவிழுந்தார். மழைவிடாது சிவபத்
தர் சுட்டியகாலமோ நீங்கிற்று; முன்னேயே ஒலித்து வீட்டிலே
காற்றினுல் உலரும்படி கட்டிவிட்டேனுமில்லை, சிவபத்தருடைய
திருமேனி குளிரினுல் வருந்தும்படி தீங்குசெய்த சிறியேனுக்கு
இனி யிதுவே செயல் என்று எழுந்தார் வஸ்திரங்களைப் புடைக்கி
ன்ற கற்பாறையிலே என்னுடைய தலையைச் சிதறும்படி எற்றுவே
ன் என்று போய்க் கற்பாறையிலே தம்முடைய சிரசை எற்ற, சா
வவியாபியாகிய பரமசிவனுடைய திருக்கரம் அந்தக் கற்பாறை
யின் பக்கத்திலேதோன்றி அவரைப் பிடித்துக்கொண்டது. ஆகா
யத்தினின்றுசொரிந்த நீர்மழைநீங்கிப் பூமழைபொழிந்தது. பரம
சிவன் உமாதேவியோடும் இடபாரூடராய்க் காட்சிகொடுத்தார்.
திருக்குறிப்புத்தொண்டநாயனர் மிகுந்த அன்பினோடு விழுந்து
நமஸ்கரித்து எழுந்து அஞ்சலிசெய்துகொண்டு நின்றார். பரமசிவ
ன் அவரைநோக்கி, உன்னுடைய பத்திவலிமையை மூவுலகத்தார்
களுக்குத் தெரிவித்தோம். இனி நீ நம்முடைய உலகத்தையடை
ந்து பேரின்பம்பெற்று வாழ்ந்திரு என்று திருவருள்புரிந்து சென்
றருளினர். சுபம்! சுபம்!!.

**திருக்குறிப்புத்தொண்டநாயனர் முத்தி அடைந்த நாள்:—**
**சித்திரைமாதம் - சுவாதிநக்ஷத்திரம்.**

## திருக்குறிப்புத்தொண்டநாயனர்
**திவ்விய சரித்திரம்**
**முற்றிற்று.**

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சிவநாமாவளி.

---

சிவசிவகஜமுக கணநாதா, சிவகணவந்தித குணநீதா.
சிவசிவசிவசிவ தத்துவபோதா, சிவகுருபரசிவ ஷண்முகநாதா.
அம்பலத்தரசே யருமருந்தே, ஆனந்தத்தேனே யருள்விருந்தே.
பொதுநடத்தரசே புண்ணியனே, புலவரெல்லாம்புகழ் கண்ணியனே.
மலைதருமகளே மடமயிலே, மதிமுகவமுதே யிளங்குயிலே.
ஆனந்தக்கொடியே யிளம்பிடியே, அற்புதத்தேனே மலைமானே.
சிவசிவசிவசிவ சின்மயதேசா, சிவசுந்தரகுஞ் சிதநடராசா.
படனவிவேக பரம்பரவேதா, நடனசபேச சிதம்பரநாதா
அரிபிரமாதியர் தேடியநாதா, அரகரசிவசிவவாடியபாதா.
அந்தணவந்தண வம்பரபோகா, அம்பலநம்பர வம்பிகைபாகா.
அம்பரவிம்ப சிதம்பரநாதா, அஞ்சிதரஞ்சித குஞ்சிதபாதா.
தந்திரமந்திர யந்திரபாதா, சங்கரசங்கரசங்கரநாதா.
கனகசிதம்பர கங்காபுரஹர, அனகபரம்பர சங்கரஹரஹர.
சகலகலாண்டசராசரகாரண, சகுணசிவாண்ட பராபரபூரண.
இக்கரைகடந்திடி லக்கரையே, இருப்பதுசிதம்பரச் சர்க்கரையே.
என்னுயிருடம்பொடு சித்தமதே, இனிப்பதுநடராச புத்தமுதே.
ஐயர்திருச்சபை யாடகமே, ஆடுதலானந்த நாடகமே.
உத்தரஞான சிதம்பரமே, சித்தியெலாந்தருமம்பரமே.
அம்பலவாசிவ மாதேவா, வம்பலவாவிங்கு வாவாவா.
நடராசனெல்லார்க்கு நல்லவனே, நலமெலாஞ்செய வல்லவனே.
ஆனந்தநாடகங் கண்டோமே பர மானந்தபோனகங்கொண்டோமே.
சகளவுபகள நிட்களநாதா, உகளசததள மங்களபாதா.
சந்ததமுஞ்சிவ சங்கரபஜனம், சங்கீதமென்பது சற்சனவசனம்.
சங்கரசிவசிவ மாதேவா, எங்களையாட்கொள வாவாவா.
அரகரசிவசிவ மாதேவா, அருளமுதந்தர வாவாவா.
நடனசிகாமணி நவமணியே, திடநகமாமணிசிவமணியே.
நடமிடுமம்பல, நன்மணியே, புடமிடுசெம்பல பொன்மணியே.
உவட்டாதுசித்திக்கு முள்ளமுதே, தெவிட்டாது தித்திக்குந்தெள்ளமுதே
நடராசவள்ளலை நாடுதலே, நந்தொழிலாம்வினை யாடுதலே.
அருட்பொதுநடமிடு தாண்டவனே, அருட்பெருஞ்சோதியென் னுண்டவ
நடராசமாணிக்கமொன்றதுவே, கண்ணுதலாணிப்பொன்மன்றதுவே[னே
நடராசபலமது நம்பலமே, நடமாடுவதுதிரு வம்பலமே. [டு
நடராசர்பாட்டே நறும்பாட்டு, ஞாலத்தார்பாட்டெல்லாம்வெறும்பாட்
சிதம்பரப்பாட்டே திருப்பாட்டுச், சீவர்கள்பாட்டெல்லாம்தெருப்பாட்டு
அம்பலப்பாட்டே யருட்பாட்டு, அல்லாதபாட்டெல்லா மருட்பாட்டு.
அம்பலவாணனை நாடினனே, அவனடியாரொடுங் கூடினனே.
தம்பதமாம்புகழ் பாடினனே, தந்தனவென்றுகூத் தாடினனே.
நான்சொன்னபாடலுங் கேட்டாரோ, ஞானசிதம்பர நாட்டாரோ.
இனித்துயர்படமாட்டேன் விட்டேனே, என்குருமேலாணையிட்டேனே.
இனிப்பாடுபடமாட்டேன்விட்டேனே, என்னப்பன்மேலாணையிட்டேனே.

(இன்னும்வரும்.)

தானந்த மில்லான் றனையடைந்த நாயேனை
யானந்த வெள்ளத் தழுத்துவித்தான் காணேடீ
யானந்த வெள்ளத் தழுத்துவித்த திருவடிகள்
வானுந்து தேவர்கட்கோர் வான்பொருள்காண் சாழலோ. (௧௦)

நங்காயி தென்னதவ நரம்போடெ லும்பணிந்து
கங்காளந் தோண்மேலே காதலித்தான் காணேடீ
கங்காள மாமாகேள் காலாந்த ரத்திருவர்
தங்காலஞ் செய்யத் தரித்தனன்காண் சாழலோ. (௧௧)

கானார் புலித்தோ லுடைதலையூண் காடுபதி
யானா லவனுக்கிங் காட்படுவா ராரேடீ
யானாலுங் கேளா யயனுந் திருமாலும்
வானாடர் கோவும் வழியடியார் சாழலோ. (௧௨)

மலையரையன் பொற்பாவை வாணுதலாள் பெண்டிருவை
யுலகறியத் தீவேட்டா னென்னுமது வென்னேடீ
யுலகறியத் தீவேளா தொழிந்தனனே லுலகனைத்துங்
கலைநவின்ற பொருள்களெல்லாங் கலங்கிடுங்காண் சாழலோ. (௧௩)

தேன்புக்க தண்பணைசூழ் தில்லைச்சிற் றம்பலவன்
றான்புக்கு நட்டம் பயிலுமது வென்னேடீ
தான்புக்கு நட்டம் பயின்றிலனேற் றரணியெல்லா
மூன்புக்க வேற்காளிக் கூட்டாங்காண் சாழலோ. (௧௪)

கடகரியும் பரிமாவுந் தேருமுகந் தேறாதே
யிடபமுகந் தேறியவா றெனக்கறிய வியம்பேடீ
தடமதில்க ளவைமூன்றுந் தழலெரித்த வந்நாளி
லிடபமதாய்த் தாங்கினான் றிருமால்காண் சாழலோ. (௧௫)

நன்றாக நால்வர்க்கு நான்மறையி னுட்பொருளை
யன்றாலின் கீழிருந்தங் கறமுரைத்தான் காணேடீ
யன்றாலின் கீழிருந்தங் கறமுரைத்தா னாயிடினுங்
கொன்றான்காண் புரமூன்றுங் கூட்டோடே சாழலோ. (௧௬)

அம்பலத்தே கூத்தாடி யமுதுசெயப் பலிதிரியு
நம்பனையுந் தேவனென்று நண்ணுமது வென்னேடீ
நம்பனையு மாமாகே ளான்மறைக டாமறியா
வெம்பெருமா னீசாவென் றேத்தினகாண் சாழலோ. (௧௭)

நலமுடைய சலந்தரன்ற னுடறடிந்த நல்லாழி
சலமுடைய நாரணற்கன் றருளியவா றென்னேடீ
நலமுடைய நாரணன்ற னயனமிடந் தரனடிக்கீ
மலராக விடவாழி யருளினன்காண் சாழலோ. (௧௮)

அம்பரமாம் புள்ளித்தோ லாலால மாரமுத
மெம்பெருமா னுண்டசது ரெனக்கறிய வியம்பேடீ
யெம்பெருமா னேதுடுத்தங் கேதமுது செய்திடினுந்
தன்பெருமை தானறியாத் தன்மையன்காண் சாழலோ. (௧௯)

அருந்தவருக் காலின்கீ ழறமுதலா நான்கினையு
மிருந்தவருக் கருளுமது வெனக்கறிய வியம்பேடீ
யருந்தவருக் கறமுதனான் கன்றருளிச் செய்திலனேற்
றிருந்தவருக் குலகியற்கை தெரியாகாண் சாழலோ. (௨௦)

திருச்சிற்றம்பலம்.

# புத்தக விற்கிரய விளம்பரம்.

☞ (புத்தகரூபம்) புத்தகலிஸ்ட்டு வேண்டுவோர் தபால்கார்டுக்கு அரையணா அனுப்பவேண்டும்.

| | விலை. ரூ. | அ. | பை |
|---|---|---|---|
| கந்தரனுபூதியுரை. | 0 | 2 | 0 |
| திருஞானசம்பந்தசுவாமிகள் சரித்திரம் . | 0 | 0 | 3 |
| சுந்தரமூர்த்திசுவாமிகள் சரித்திரம் ... | | 0 | 3 |
| திருநாவுக்கரசுசுவாமிகள் சரித்திரம் .. | | 0 | 3 |
| காரைக்காலம்மையார் சரித்திரம் .. | | 0 | 3 |
| சிறுத்தொண்டநாயனார் சரித்திரம் .. | | 0 | |
| சண்டேசுரநாயனார் சரித்திரம் .. | | 0 | 3 |
| கண்ணப்பநாயனார் சரித்திரம் .. | 0 | 0 | 3 |
| விவேகசுந்தரம் நெ. க, உ, ௩, ௪, ௫, ௬, எ, அ, (௯ & ௰ In the Press) பிரதி 1 | 0 | 0 | 3 |
| விவேகபோதினி நெ. க, உ, ௩, ௪, ௫, ௬, (எ & அ In the Press) பிரதி 1 | 0 | 0 | 3 |
| கடன்பட்ட கந்தன கதை | 0 | 0 | 6 |
| புருஷோத்தமவேஷ பூதகி கதை Part I. II. | 0 | 1 | 0 |
| மனமோகனராஜன் சரித்திரம் | | 1 | |
| ஏசுகிறிஸ்துமனிதனே | | 0 | |
| ஓந்துஜெயபேரிகை | | | |
| ,, நெ. க, | | 0 | |
| ,, ,, உ, | | 0 | |
| ,, ,, ௩, | | 0 | |
| சிவனுந் தேவனே? என்னுந் தியாகாவுக்கு ஆப்பு (இரண்டாம் பதிப்பு.) | 0 | 0 | 6 |
| வஜ்ரடங்கம் . . | 0 | | |
| கிறிஸ்துமதகண்டனம் | 0 | | |
| கிறிஸ்தவர் விடைகளின் மறுப்பு . . | 0 | 2 | 0 |
| பைபிலும் உலகசிருட்டியின் ஆபாசமும், பாதிரிகளுக்கு ஓர் சம்பத்தி. | 0 | 0 | |

| | விலை. ரூ. | அ. | பை |
|---|---|---|---|
| Bible Dissector (English) | 0 | 0 | 6 |
| One Hundred & Fifty Contradictions of the Bible (English.) ... | 0 | 1 | 0 |
| மாதர்நீதி . . | 0 | 6 | 0 |
| வியாதிமூலங்கள் ... | 0 | 0 | 0 |
| ஜீவனோபகாரம் | 0 | 1 | 0 |
| தாமபுரீஸ்வரர் கீர்த்தனைகள் பதங்கள் | 0 | 2 | 6 |
| சிறுத்தொண்டநாயனார் கீர்த்தனை . | 0 | 4 | 0 |
| சிவாமிர்தவிநோதம் ... | 0 | 3 | 0 |
| நீதிமஞ்சரி 1-பாகம் அர்த்தம் ... | 0 | 2 | 6 |
| ,, 2-பாகம் ... | 0 | 6 | 0 |
| ஔவைக்குறள் மூலம் | 0 | 2 | 0 |
| சிவசிவவெண்பா சோமேசர் முதுமொழி வெண்பா மூலம் | 0 | 2 | 0 |
| மாணிக்க வாசகபுராணவசனம் ... | 0 | [illegible] | 0 |
| பழனிசசிவேடை வெண்பா ... | 0 | 0 | 6 |
| திருத்தணிகைச் சந்நிமுறை ... | 0 | 4 | 0 |
| வாந்திபேதிக்கு வயித்தியம .. | 0 | 1 | 0 |
| (1) சதுருசாவாசம் நிந்தியாங்கடம் (2) நாணமை நலந்தரும் (3) பேராசை பெருநஷ்டம் (4) அடாதுசெய்தோன் படாதுபடுவான் (5) மனக்கவலைபலத்தைக் குறைக்கும் (6) குணபூஷணிசரித்திரம் (7) கெடுவான் கேடுநினைப்பான் (8) முயற்சி திருவினையாக்கும். | 0 | 1 | 0 |
| பாதிரிமார் ஸ்கூலில் பெண்கள் படிக்கலாமா? | | | |
| ஞானரத்நாவளி | 0 | 1 | 0 |
| கந்தபுராணநவநீதம் | 0 | 6 | 0 |
| ஆர்யஜனஐக்கியம் | 0 | 2 | 0 |
| திருமங்கிலியதாரணவிதி | 0 | 0 | 3 |